# மே – 12 – சனி

## புனித பங்கிராஸ்

### கடவுள் பிறஇனத்தார் மீது ஆட்சி செய்கின்றார்: திபா. 47:8

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 18 : 23 –28

பவுல் சிறிது காலம் யந்தியாக்கியாவில் செலவிட்டபின் அங்கிருந்து புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகக் கலாத்தியா, பிரிகியா, பகுதிகள் வழியாகச்சென்று சீடர்கள் அனைவரையும் உறுதிப்படுத்தினார்.அலக்சாந்திரியாவில் பிறந்த அப்பொல்லோ எனும் பெயருடைய யூதர் ஒருவர் எபேசு வந்தடைந்தார். அவர் சொல்வன்மை மிக்கவர் மறைநூல்களில் புலமை வாய்ந்தவர்.ஆண்டவரின் நெறிகளைக் கற்றறிந்தவர் ஆவம்மிக்க உள்ளத்தோடு இயேசுவைப்பற்றிய செய்தியைப் பிழையற அறிவித்தும் கற்பித்தும் வந்தார். ஆனால் அவர் யோவான் கொடுத்த திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார்.அவர் தொழுகைக் கூடத்தில் துணிவுடன் பேசத் தொடங்கினார். அவர் பேசியதைக் கேட்ட பிரிஸ்கில்லாவும் அக்கில்லாவும் அவரை அழைத்துக் கொண்டுபோய், கடவுளின் நெறியைத் திட்டவட்டமாக விளக்கினார்.அவர் அக்காயாவுக்குப் போக விரும்பிய போது சகோதரர் சகோதரிகள் அவரை ஊக்கப்படுத்தி, அவரை ஏற்றுக்கொள்ளுமாறு சீடருக்குக் கடிதம் எழுதினார்கள். அவர் அங்கே சென்றபோது இறையருளால் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்குப் பெரிதும் துணையாய் இருந்தார். ஏனெனில் அவர் வெளிப்படையாகவும் சிறப்பாகவும் யூதர்களிடம் வாதாடி, ”இயேசுவே மெசியா” என மறைநூல்களின்மூலம் எடுத்துக்காட்டினார்.

**பதில்பாடல் :** கடவுளே அனைத்து உலகின் வேந்தர் நீரே.

## நற்செய்தி : யோவான் 16 : 23 - 28

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது :அந்நாளில் நீங்கள் என்னிடம் எதையும் கேட்கமாட்டீர்கள். நீங்கள் என்பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இதுவரை நீங்கள் என்பெயரால் எதையும் கேட்டதில்லை. கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும்.”நான் உங்களிடம் உருவகமாகவே பேசிவந்துள்ளேன். ஆனால் காலம் வருகிறது. அப்போது உருவகங்கள் வாயிலாய்ப் பேசாமல், தந்தையைப்பற்றி வெளிப்படையாய் எடுத்துரைப்பேன்.அந்நாளில் நீங்கள் என் பெயரால் வேண்டுவீர்கள். அப்போது ”உங்களுக்காகத் தந்தையிடம் கேட்கிறேன்” என நான் சொல்லமாட்டேன்.ஏனெனில் தந்தையே உங்கள்மீது அன்பு கொண்டுள்ளார். நீங்கள் என்மீது அன்புகொண்டு, நான் கடவுளிடமிருந்து வந்தேன் என்று நம்புவதால்தான் தந்தையும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார்.
நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகைவிட்டுத் தந்தையிடம் செல்கிறேன் என்றார்..”

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் எங்கள் ஒவ்வொருவர் மீதும் கொண்டுளள அன்பின் நிமித்தம் எம்மை மீட்டெடுப்பதற்காக தனது ஒரே பேறான மகனை உலகிற்கு அனுப்பினார். அவரது கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர்மீது அன்பு கொண்டு வாழ்வோமேயானால் எம்முள்ளத்தை அறிந்த இறைவன், நாங்கள் நம்பிக்கையுடன் எதைக் கேட்கின்றோமோ அவை யாவற்றையும் பெற்றுக்கொள்வோம் என்று இன்றைய இறை தியான வாசகங்கள் எமக்குத் தெரிவிக்கின்றது. நாங்கள் இறைவன் மேல் கொண்டுள்ள அன்பு, நம்பிக்கையானது எந்தளவில் காணப்படுகின்றது என்று சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் நாங்கள் வாயளவில் சொல்லிக் கொள்கின்றோமே தவிர எமது வாழ்வானது மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. மற்றவர்களைப் புறங்கூறுதல், தேவையற்ற வகையில் குற்றம் சுமத்துதல், இவ்வாறு பல தீய நாட்டங்களுடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். அதனால் பகைமையை உணர்வுடன் உறவுகளுக்கிடையே விரிசலை ஏற்படுத்திக்கொள்கின்றோம். ஆனால் இவ்வாறு செய்யும் பொழுது இறைவனுக்கே செய்கின்றோம் என்பதை மறந்து விடுகின்றோம். அதன்நிமித்தம் எம்மைத் திருத்துவதற்காக துன்பங்கள், வேதனைகள் வரலாம் ஆனால் இறைவன்மேல் நம்பிக்கையற்ற தன்மையினால் தாங்கிக்கொள்ள முடியாது. கடவுள் எனக்குத்தான் மேலும் மேலும் சோதனையைத் தருகின்றார் என்று கடவுள்மேல் பழியைப் போட்டுவிடுகின்றோம். ஆனால் நாங்கள் எவ்வாறு வாழ்ந்தாலும் அவர் எமது உள்ளங்களை அறிந்தவர். ஏற்ற வேளையில் யாவற்றையும் நிறைவாகத் தருவார். “நீங்கள் என்னிடம் எதையும் கேட்கவில்லை கேளுங்கள் பெற்றுக் கொளவீர்கள்” (யோவான்16:24) எனவே எமக்கு எவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டாலும் இறைவன் யாவற்றையும் நன்மைக்கே செய்கின்றார் என்று விசுவசித்தவர்களாக அன்று எபேசு நகரிலே யூதர் ஒருவர் “இயேசு மெசியா” என்று பல எதிர்ப்புக்கள் மத்தியில் அறிவித்து வந்தார் அதேபோன்று நாங்களும் இறைவன் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக இயேசுவைப்பற்றி அறிவிக்க எங்களைத் தயார்படுத்துவோம்.